வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 239/2021

வழக்கு சாட்சி LW1 /PW1

| பெயர் | முருகம்மாள் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | கலைமணி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 65 |

தேதி 20.02.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாதவரம் பகுதியில் வசித்து வருகிறேன். என் கணவர் கலைமணியுடன் 10 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தேன். எனக்கு 1982ல் திருமணம் நடைபெற்றது. எனக்கு 5 ஆண்பிள்ளைகள். என் கணவர் என் வீட்டில் வேலை செய்த ராணி என்பவருடன் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். அவருடன் தவறான உறவு இருந்தது குறித்து அடிக்கடி கேள்விகேட்டு வந்தேன். நான் சீட்டு கட்டிவைத்திருந்த ரூ.50,000த்தை என் கணவர் எடுத்துக்கொண்டு ராணியோடு வெளியே சென்றுவிட்டார். மீண்டும் வரவில்லை. பின்னர் நான் தேடிபார்த்தபோது, இன்ஜினியர் என்னிடம் என் கணவர் ராணியை அழைத்து பணத்தோடு ஓடிவிட்டார் என்று கூறினார். அவரிடம் ஊரிலிருந்த சொத்துக்களை மேற்படி களவாடி கொண்டு சென்ற பணத்தை கொண்டும் செங்குன்றத்தில் ராணிக்கு வீடு வாங்கி கொடுத்தார் என்று கேள்விபட்டேன். ஆகையால் இதுகுறித்து நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

எப்போது எனக்கும் கலைமணிக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் 1982. கலைமணிக்கும், ராணிக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. வேலைக்கு வரும்போது 3 பிள்ளைகள் இருந்தது. எப்போது நான் புகார் கொடுத்தேன் என்றால் 2016. எங்கு அளித்தேன் என்றால் ஞாபகம் இல்லை. எப்போது இருவரும் ஓடிப்போனார்கள் என்றால் 10 வருடங்களுக்கு முன்பு. எங்கு ஓடிச்சென்றார்கள் என்றால் எனக்கு சரியாக தெரியாது. எனக்கு 5 ஆண்பிள்ளைகள் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சியானது அடுத்த வாய்தாவிற்கு ஒத்திவைக்கப்படுகிறது.**